Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 4-3-1985 திங்கட்கிழமை (மாசி 21 - ஜ. ஆகிர் 11) முழக்கம் 28

இலங்கை விடுத்துள்ள நிபந்தனை:

## பார்த்தசாரதி இல்லையென்றால் பாரதத்துடன் பேசத் தயார்!

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான பாரதத்தின் பேச்சுவார்த்தைகளில், 'முதுகெலும்பாக' த்திகழ்ந்து வந்த பார்த்தசாரதியை ஒதுக்கி வைத்து விட்டே, புதிய பேச்சுவார்த்தைகளை இந்தியாவுடன் நடத்த இலங்கை விரும்புகின்றதாம். தற்போது பாரதப்பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் செய்தியொன்றில் இவ்விடயம் நுணுக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. கூட்டணியினர் அடிக்கடி பார்த்தசாரதியுடன் தொடர்புகொண்டு வருவதால் 4-ம் பக்கம் பார்க்க

★ அமைச்சர் அத்துலத் முதலி பகிரங்க அறிவிப்பு:

# தமிழர்கள் இரகசியமாக தேசிய பாதுகாப்புக்கு நிதி வழங்குவது சிங்களவருக்கு கிடைத்த வெற்றி

(மீரிகம)

''வவுனியாவில் இருந்து ஆனையிறவு வரை இரண்டு இலட்சம் மக்கள் குடியமர்த்தப்படவுள்ளனர் என்றுதேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி மீரிகமவில் டட்லி சேனநாயக்க கனிஷ்ட பாடசாலையில் நடைபெற்ற 101வது மகாபொல நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

''திட்டமிட்ட அடிப்படையில் தீவிரவாதிகளை அடக்குவதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. எமது இந்த முயற்சியில் நாம் வியக்கத்தக்க முறையில் அற்புதங்களைச் செய்வோம்'' என்று கூற முடியாது. பயங்கரவாதத்தை திட்டமிட்ட முறையில் அடக்கிவரும் அதேவேளையில் அவர்களுக்கு வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படக் கூடாது. தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கும் முறையைத் தவிர்த்துக்கொண்டு எங்களுடன் நேரடி மோதலுக்கு வர — 4 ஆம் பக்கம் பார்க்க

★ அமெரிக்க காங்கிரஸில் தெரிவிக்கப்பட்டது:

# இனப்பிரச்சினை தீர்விடில் 86ல் அமெரிக்க உதவிகள் குறையும்!

## இந்தியாவை தூரப்போக விடக்கூடாது எனவும் பேராசிரியர் சிங்கர் அறிவிப்பு

(வாஷிங்டன்)

இனப்பிரச்சினைக்கு இலங்கை விரைவாக அரசியல் தீர்வு காணத் தவறுமானால், 1986-ம் ஆண்டில் அமெரிக்கா இலங்கைக்கு வழங்கும் பல்வேறு உதவிகளையும் வெகுவாகக் குறைப்பதுபற்றி தீவிரமாக பரிசீலிக்கப்படுமென்று அமெரிக்காவின் ஆசியபசிபிக் பிராந்தியக் கமிட்டிக் கூட்டத்தில் பேராசிரியர் சிங்கர் கருத்து வெளியிட்டுள்ளார்.

''இலங்கையில் இப்போது நெருக்கடி நிலை அதிகரித்துள்ளது. இராணுவத்தீர்வு இதற்குச் சாத்தியமாகாது, அரசியல் தீர்வைக் காணவேண்டியது இலங்கை அரசாங்கத்தின் முக்கியமான கடமையாகும். இல்லாவிடின் அமெரிக்கா தனது உதவிகளை வழங்குவது அர்த்தமற்றதாகிவிடும்'' எனவும் பேராசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்படி பிராந்தியக் கமிட்டிக் கூட்டத்தில் பேராசிரியர் சிங்கர் நீண்ட நேரமாக இலங்கை இந்திய விவகாரங்கள் பற்றி விளக்கிக் கூறினர்.

''இந்தியா உலகில் மிகப் பெரிய, முக்கிய ஜனநாயக நாடுகளில் ஒன்று. இந்த நாடு எம்மை விட்டுத் தூரப் போகவோ, விலகிச் செல்லவோ நாம் அனுமதிக் -4ம் பக்கம் பார்க்க

## பற்றைகள், காடுகள் வெட்டப்படுகின்றன

மட்டுநகரின் பலபகுதிகளில் பாரிய இயந்திரங்களின் உதவி கொண்டுகாடுகள், பற்றைகளை அழிக்கும் வேலை துரிதமாக நடைபெற்று வருகின்றது.

அம்பலாந்துறை, புதுக்குடியிருப்பு, களுவாஞ்சிக்குடி, குருக்கள்மடம், தாளங்குடா ஆகிய பகுதிகளே இவ்வாறு 'சுத்தம்' செய்யப்பட்டு வருகின்றன.

வீதிகளிலிருந்து பார்த்தால் கடற்கரைப் பிரதேசம் நேராகத் தெரியும் வகையில் காடுகள். பற்றைகள் பாதுகாப்புக் காரணமாகவே அழிக்கப்பட்டு வருகின்றதாம்.

களுவாஞ்சிக்குடிப்பகுதி வீதியில் கண்ணிவெடித் தாக்குதல்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்து வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்திய கடல் ரோந்தை இலங்கை வரவேற்கிறது

இந்தியக் கடல்எல்லையில் இந்தியக் கடற்படையின் அதிகரித்த நடவடிக்கைகள் நல்ல பலனைத் தரும் என அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

இந்திய மீனவர்களைப் பாதுகாக்கவே இந்நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டுள்ளது எனினும், கண்காணிப்பு வலயத்தை மேலும் பலப்படுத்துவதற்கும் சட்ட விரோதப் போக்குவரத்தை தடைசெய்யவும் இந்நடவடிக்கை உதவும் எனவும் அமைச்சர் கூறினர்.

இதற்கிடையே, அடுத்த வாரத்திலிருந்து இலங்கை மீனவர்களை குறிப்பிட்ட கடற் பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## இலங்கையர் மூவரின் சடலம்

(ராமேஸ்வரம்)

ராமேஸ்வரம்கடல் பகுதியில் கரையிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் மிதக்கக் காணப்பட்ட மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுக் கரைக்கு கொண்டு வரப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

- 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக புதிய ஏழு அமைச்சர் நேற்றுப் பதவியேற்றனர்

(சென்னை)

தமிழ்நாடு அமைச்சரவையின் புதிய ஏழு அமைச்சர்களுக்கும் நேற்றுக் காலை ராஜ்பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் ஆளுநர் திரு. எஸ். எல். குரானா பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், அவரது அமைச் -4ம் பக்கம் பார்க்க

## ராமேஸ்வரத்துக்கு நேற்று 803 அகதிகள் சென்றனர்

(சென்னை)

இலங்கையின் வடபகுதியிலிருந்து நேற்று மட்டும் 803 அகதிகள்படகுகள்மூலம் ராமேஸ்வரம் சென்றடைந்தனர். இவர்கள் மொத்தம் 199 குடும்பங்களைச் சேர்ந்தவர்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சுமார் இருநூறு அகதிகள் மண்டபம் சென்றடைந்தனர். நேற்று வரை சுமார் பதினொன்றாயிரம் அகதிகள் தமிழகம் சென்றுள்ளனர்.

ராமேஸ்வரம், மண்டபம் ஆகிய இடங்களிலிருந்து அகதிகள் முகாமுக்கு அனுப்பப்படுபவர்களுக்கு நிவாரண உதவி, உடுபிடவைகளுடன் கூப்பன் அட்டை, அடையாள அட்டை ஆகியனவும் வழங்கப்படுகின்றன.

கூடுதலான அகதிகளும் தலைமன்னார், பேசாலை பகுதிகளிலிருந்து சென்றவர்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெனரேட்டரை காணவில்லை

(மாங்குளம்)

மாங்குளம் இலங்கை வங்கியில் இருந்த ஜெனரேட்டர், மோட்டா ஆகிய இரண்டையும் நேற்றிரவிலிருந்து காண -4ம் பக்கம் பார்க்க

அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கை

## மட்டுநகர் முகாம் தாக்குதலின்போது மூன்று தீவிரவாதிகள் ஸ்தல மரணம்

(மட்டுநகர்)

மட்டக்களப்புக்குச் சமீபமாகவுள்ள தீவிரவாதிகளின் முக்கிய முகாமொன்றை பாதுகாப்புப் படைகள் நேற்று முற்றுகையிட்டபோது இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் மூன்று தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், பல்வேறு விதமான ஆயுதங்களும், முக்கிய விபரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகளும் கைப்பற்றப்பட்டதாகவும் அரசாங்க அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிக்குச் சென்றுகொண்டிருந்த பொலிசார் ஒருவரைக் கடத்திச் செல்ல முற்பட்டபோது கைதான இளைஞரே இம் முகாமைக் காட்டிக் கொடுத்ததாகவும், இவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

கைதான இளைஞன் முகாம் இருக்கும் இடத்திற்கு பொலிசாரைக் கூட்டிச் சென்றதாகவும், அப்போது முகாமிற்குள் இருந்த தீவிரவாதிகள் இயந்திரத் துப்பாக்கியாலும் கைத்துப்பாக்கிகளாலும் அவர்களை நோக்கிச் சுட்டதாகவும், பொலிசார் நடத்திய பதில் - 4 ஆம் பக்கம் பார்க்க

## தினசரி ஒரு சேவை மட்டும்

(சுண்டுக்குளி)

நெடுந்தீவு- குறிகாட்டுவான் படகுச் சேவை தினமும் ஒரு தடவையே நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது இப் படகுச் சேவை முன்னர் தின - 4 ஆம் பக்கம் பார்க்க

## வட பிராந்திய தொ. ச. கூட்டுக்குழு மகஜர்:

# வடக்கில் பாதிக்கப்பட்ட எவருக்கும் நஷ்ட ஈடோ, நிவாரணமோ வழங்கப்படவில்லை

"வடக்கில் நிகழும் கொடூர அவசரகாலச் சட்ட அமுலும் அரசினுல் பொது மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச பயங்கரவாதமும் பற்றியும் அது குறித்த ஐந்து கோரிக்கைகளும் உள்ளடக்கிய எமது சென்ற வருட மார்கழி மாதக் கடிதத்திற்குப் பின்னர் இப்போது 1983லும் அதற்குப் பின்னரும் ஆயுதப்படைகளால் கொல்லப்பட்ட அல்லது பலத்த காயத்திற்குள்ளான இப்பகுதியின் தொழிலாளர்கள் பற்றிய தகவல்களை இக்கடித மூலம் உங்களுக்கு அனுப்புகிறோம்"

இவ்வாறு பதின் மூன்று தொழிற் சங்கங்களைக் கொண்ட வடபிராந்திய தொழிற் சங்கக் கூட்டுக்குழு ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. பட்டியலின் விபரங்களிலிருந்து இவர்களிற் பெரும்பாலோர் கடமையிலிருந்த போதோ அல்லது கடமைக்கு வரும் வழியிலோ அன்றேல் கடமை முடிந்து போகும் போதோதான் தாக்கப்பட்டனர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம் எனவும் குழு சுட்டிக்காட்டியுள்ளது

இதுவரை காலமும் இந்த ஊழியர்களில் எவருக்குமோ அல்லது இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கோ எவ்வித நிவாரணமோ நட்ட ஈடோ வழங்கப்படவில்லையென்பதைக் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ள குழுவினர் அகதிகள் புனர்வாழ்வுக்கான செயலாளர் வடக்கிலும் கிழக்கிலுமிருந்து பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த அகதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படுமென அறிவித்துள்ளது குறித்து தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நிவாரண உதவிப் பட்டியலில் வடக்கிலும் கிழக்கிலுமான பாதிக்கப்பட்டோர். கவனமாகத் தவிர்க்கப்பட்டிருப்பது குறித்து தமது கண்டனத்தையும் குழு தெரிவித்துள்ளது

இவ்வகையில் வடக்கில் பொதுமக்கள் மீது நடந்து வரும் சகல கொடூர நடவடிக்கைகளையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர தமது முன்னைய ஐந்துகோரிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென ஜனாதிபதியை வேண்டிக் கொள்வதோடு பாதிக்கப்பட்ட தமது ஊழியர் பொதுமக்கள் ஆகியோருக்கு உரித்தான நட்டஈடுகளையும் வழங்குமாறும் தொழிற்சங்கக் கூட்டுக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.




❋ குருநகர் இராஜரட்டினம் றெஜீனு தம்பதிகளின் மகள் கங்மா இன்று தனது மூன்ருவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

❋ கரவெட்டி யேசுநாயகம் ஜெகதா தம்பதிகளின் மகன் யூட் சுவன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ கொட்டடி பாலசுந்தரம் இந்திராதேவி தம்பதிகளின் மகன் மயூரன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ அரியாலை அரசகேசரி இராதாமணி தம்பதிகளின் மகன் கோபிராகவன் இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ மாவியப்பிட்டி பிள்ளையான் சரஸ்வதி தம்பதிகளின் மகள் விமலாதேவி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ சுண்டுக்குளி வசந்தகுமார் யோகேஸ்வரி தம்பதிகளின் மகன் குமாரதீபன் இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

## அமரர் குமாரசாமி சிரார்த்த தினம்

(சரசாலை)

சாவகச்சேரித் தொகுதியின் முதல் பாராளுமன்ற உறுப்பினரான அமரர் வே குமாரசாமியின் ஏழாவது சிரார்த்த தினத்தை மிகவும் அமைதியான முறையில் கொண்டாடுவதற்கு அவரின் ஆதரவாளர்களும் உறவினர்களும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். இவரின் சிரார்த்த தினம் இம்மாதம் பத்தாம் திகதியாகும்

## யாழ். மாவட்டத்தில்

# 10-13 வருட மாணவர் பரீட்சை இம்மாதம் 19ல் ஆரம்பம்

(புங்குடுதீவு)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 10ம் ஆண்டு முதல் 13ம் ஆண்டு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கான முதல் தவணைக்குரிய விஞ்ஞான, கணித, கலை, வர்த்தக, பாடப்பரீட்சையினைத் தொண்டமானுறு வெளிக்கள நிலையம் யாழ். கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்த முன் வந்துள்ளது.

பத்தாம், பதினெராம் ஆண்டு மாணவர்களுக்கான விஞ்ஞான கணித பாடப் பரீட்சை இம்மாதம் 21, 22ம் திகதிகளில் நடைபெறும்.

12ம், 13ம் ஆண்டு மாணவர்களுக்கான விஞ்ஞான பரீட்சை இம்மாதம் 19ம திகதி முதல் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளைப் பிரஸ்தாப நிலையத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

## ராணுவ தடை நீங்கியது

# குடாநாட்டுக்குள் நுழைய பங்குத் தந்தைக்கு அனுமதி

(மிருசுவில்)

ஒல்லாந்து தேசத்தைச் சேர்ந்தவரும், பரந்தன் பங்குத் தந்தையுமான அருள்திரு. ஓம்லு அடிகளாருக்கு யாழ். குடா நாட்டினுள் நுழைய தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த இவர் ஞான ஒடுக்கம் ஒன்றில் கலந்து கொள்வதற்காகத் தனது வாகனத்திற் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருக்கையில் அண்மையில் ஆனையிறவு தடை முகாமில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தார்.

வெளிநாட்டவர் எவரும் யாழ் குடாநாட்டினுள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அவ்வாறு செல்வதாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டுமெனவும் அப்போது இவருக்குக் கூறப்பட்டதாம்.

எனினும் இவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக ஆனையிறவு இராணுவ முகாம் பொறுப்பதிகாரியினுல் யாழ். குடாநாட்டினுள் செல்ல இப்போது இவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## ஊழியர் நலன்புரி சங்கம்

(சுண்டுக்குளி)

யாழ். தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடத்தில்அமைந்துள்ள எட்டுத் திணைக்களங்கள், அரசாங்கநிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் நலன் கருதி யாழ் வீடமைப்புச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் உருவாக்கப்படவுள்ளது.

இந் நலன்புரிச் சங்கம் மூலம் ஊழியர்கள் தற்போது எதிர் நோக்கும் பலவித பிரச்சினைகளுக்கும், போக்குவரத்து வாகன வசதிகள் மற்றும் அவசிய தேவைகளுக்கான பணவுதவிகளைப் பெற்று நிவாரணம் பெறுவதற்கும் வழியேற்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது

# புதிய சம்பளத் திட்டத்தின்கீழ் பட்டதாரி ஆசிரியர் நான்கு பிரிவாக்கப்பட்டுள்ளனர்

தயாரத்தின தலைமையில் இயங்கிய கல்வி அமைச்சின் சம்பள மீளாய்வுக் குழு பட்டதாரி ஆசிரியர் பதவிகளின் வகைகளைக் குறைத்து அதற்கேற்ப சம்பளத் திட்டத்தினை விதந்துரைக்கும் என ஆசிரியர்கள் எதிர்பார்த்தனர்

ஆனல் ஏற்கனவே இரு வகையாகக் கணிக்கப்பட்டு பட்டதாரிச் சம்பளம் பெற்று வந்த ஆசிரியர்கள் இனிமேல் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள் நான்கு விதமான சம்பளத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. இது மிகுந்த கவலையை அளிப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த மகாசிவம் கருத்து வெளியிட்டார்.

மேலும் பட்டதாரி ஆசிரியர்களை பாடரீதியாகத் தரம் பிரித்து வேறுபட்ட சம்பளத் திட்டம் தொடர்ந்தும் அமுல் படுத்தப்படுவதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சேவையில் இருக்கும் ஆசிரியர்கள் 1984 ஜனவரி ஒன்றிற்குப் பின்னர் பட்டம் பெற்றிருந்தால் அவர்கள் பட்டதாரிச் சம்பளம் பெறும் வாய்ப்பு இவ்விதப்புரையில் குறிக்கப்படவில்லை. விசேட பதவி தரம் III வகிப்பவர்களும், பொதுப் பட்டதாரிகளுக்குரிய சம்பளத்தைப் பெறுவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

(சம்பள அளவுத் திட்ட விபரம் பின்னர் ஈழமுரசில் வெளியிடப்படும்)

## கிளிநொச்சி பிரஜைகள் குழு

# முல்லை அகதிகளுக்கு பணம் பொருள் சேகரித்து உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவினர் முல்லைத்தீவு அகதிகளுக்கு உதவுமுகமாக கிளிநொச்சி மாவட்ட மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட பொருட்களை இரு வாகனங்களில் கொண்டு சென்று முல்லைத்தீவு அகதிகள் முகாமில் ஒப்படைத்துள்ளனர் பணமும் அகதிகளிடம் வழங்கப்பட்டது.

நான்கு மூடை அரிசி சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியான உடுபுடவைகள் மரக்கறி பால்மா வகைகள், பணமாக ஆருயிரம் ரூபா என்பன இதிலடங்கும்.

பிரஜைகள் குழுவின் தலைவர் வண. பிதா பயஸ் அடிகள், பொருளாளர் ப. வை. ஜெயபாலன் மற்றும், திரு இராமநாதன், திரு. கோபால், திரு. தர்மசிங்கம் ஆகியோரடங்கிய இக்குழுவினர் முகாம்களையும் சென்று பார்வையிட்டனர்.

## பாடசாலைக் கூட்டம்

(புலோலி)

பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாச மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 10ம் திகதி வித்தியாலய அதிபர் திரு. எஸ். சிவஞானசுந்தரம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பெற்ருேர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அதிபர் சிவஞானசுந்தரம் கட்டுள்ளார்,

## புங்குடுதீவு

# ஸ்ரீகணேச மகா வித்தியாலய 75வது ஆண்டுவிழா ஆரம்பம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி இவ்வாண்டு முழுவதும் பல்வேறு செயற்றிட்டங்கள் இவ் வித்தியாலயத்தில் செயற்படுத்தப்படவுள்ளது.

ஆடம்பரம் எதுவுமின்றி மிக அமைதியான முறையில் ஆக்கபூர்வமான வேலைகளை மேற்கொள்வதென விழாக்குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

இன்று திட்கட்கிழமை காலை விசேட பூசை, வழிபாடுகளுடன் இவ்வைபவங்கள் ஆரம்பமாகவுள்ளன. வித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் இன்று காலை விநாயகப் பெருமானுக்கு விசேட பூசை, வழிபாடுகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சிரமதானப் பணியொன்று அங்கு மேற்கொள்ளப்படும். பிரஸ்தாபவித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்ருேர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் இச் சிரமதானத்தில் பங்கு கொள்வர்.

## வரி விளம்பரம்

பரந்தன் சந்தியில் இரண்டு (2) கடை கட்டக் கூடிய இடம் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: ஆ. சிவஞானசுந்தரம் மே/பா ஆறுமுகம்அன் சன்ஸ் பரந்தன் சந்தி பரந்தன்.

## பாடசாலை பஸ்சேவை

நல்லூர் திருநெல்வேலி பகுதி பிள்ளைகளின் நலன் கருதி யாழ் நகரில் உள்ள பாடசாலை அனைத்திற்கும் பஸ் சேவை ஆரம்பிக்கவுள்ளோம். பஸ் சேவை திருநெல்வேலி சந்தியில் ஆரம்பித்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரி வரையும் நடைபெறும். தொடர்பு ராம்கரன் புத்தகசாலை டலாலி வீதி திருநெல்வேலி சந்தி.

## இளைஞர் முன்மாதிரி

(புங்குடுதீவு)

நீண்டகாலமாகக் கவனிப்பாரற்ற நிலையில் குண்டும் குழியுமாகக் காட்சி தந்த புங்குடுதீவு இறுபிட்டி பிரதான வீதி தற்போது திருத்தியமைக்கப்படுகிறது. இளைஞர் கோஷ்டியொன்று இவ் வீதி திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

## இரு கொள்ளைகள்

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம் ப.நோ கூ. சங்க கிளையில் ஏராளமான உணவுப் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளது. இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டியொன்றினுலேயே இக்கொள்ளை மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இதே தினம் அக்கராயன் குளம் கமநலச் சேவை நிலையத்திலும் ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினுல் பெறுமதி வாய்ந்த விவசாய உதிரிப்பாகங்கள் இரசாயனப் பொருட்கள் என்பன கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளன,

## மாணவர்கள் பெரும் வேதனை

(சுண்டுக்குளி)

கொக்குவிலிலுள்ள யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் அண்மையில் இடம் பெற்ற சொள்ளையின் போது ஜப்பானிலிருந்து வரவழைக்கப்பட்ட லேத் இயந்திரத்தின் மீற்றரும் சாவிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன என்றும் இதனுல் தொழிற் பயிற்சி பெறும் மாணவர்கள் இந்த இயந்திரத்தை இயக்கிப் பயிற்சி பெற முடியாத நிலையேற்பட்டுள்ளதென்றும் இத் தொழில் நுட்பக் கல்லூரித் தொழிற் பயிற்சி மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அபகரித்துச் செல்லப்பட்ட லேத் இயந்திர மீற்றர் சாவிகளையாவது மீண்டும் திருப்பி ஒப்படைக்குமாறும் இம் மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## புதிய அதிபர்

(புலோலி)

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபராக திரு. ரீ. கங்காதரன் பொறுப்பேற்றுள்ளார். இவர் முன்னர் இரத்தினபுரி மாவட்டத்தில் கடமையாற்றியவரென்பது குறிப்பிடத்தக்கது.

## நியமனம்

(புலோலி)

வட பிராந்திய கால் நடை சுகாதாரத் திணைக்கள பதில் உதவிப் பணிப்பாளராக கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் எம். தங்கராசா (பருத்தித்துறை) நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈழமுரசு



**உதய சிந்தனை**

"உலகை அழிக்கும் வலிமையுடைய காலன் நான். உலகங்களை ஒடுக்குதற்கு இங்கு உற்றேன். நீ இல்லாமலும் கூட எதிரிச் சேனைகளில் கூடியுள்ள போர்வீரர்கள் எல்லாரும் அழிவார்கள்.

- பகவத்கீதை.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

4-3-85 திங்கட்கிழமை (இரத்தாக்ஷி மாசி 21)

# யாழ்ப்பாணக் குடா வரவரச் சுருங்குகிறது

வடபகுதியின் தலைநகரான யாழ்ப்பாணம் படிப்படியாக மற்றைய பிரதேசங்களுடன் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளும் ஒரு அபாயமான நிலை இப்போது உருவாகிவருகின்றது.

உலகம் முழுவதும் நேரடியாகத் தொலைபேசிச் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ள இன்றைய நாளில், யாழ்ப்பாண மக்கள் குடா நாட்டுககுளளேயே ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணததிலிருந்து வெளிநாடுகளுடன் அவசர தேவைகளுக்காகத் தொடர்பு கொள்வது என்பது இப்போது சிம்ம சொப்பனமாகியுள்ளது.

அண்டைநாடான இந்தியாவுடன் தொடர்பு கொள்வதற்கு இங்குள்ள தொலைத்தொடர்பு அலுவலகத்தினால் முடியாது. 'புககிவஸ்' மட்டும் நடைபெறும். யாழ்ப்பாண அலுவலகத்தினால் இந்தியத் தொலைபேசித் தொடர்புகளை வழங்க முடியாதாம்.

'கொழும்பை' வேண்டி இரண்டு மூன்று நாட்கள் தவமிருந்தால், சில வேளை இணைப்புககிடைக்கும். அது அவரவர் அதிஷ்டத்தைப் பொறுத்தது.

யாழ்ப்பாணத்தில் இருப்பவர்கள் இந்தியாவுடன் என்ன கதைககிறார்கள்? இவர்களுககிடையே 'கொட்டியா' கதை இடம் பெறலாமென்ற தேவையில்லாத சந்தேகமும் இதற்கான காரணமாக இருக்கலாம்.

வெளிநாடுத தொலைபேசி அழைப்புகள் தான் போகட்டும்! உள் நாட்டுத் தொடர்புகளுக்கு என்ன நடந்தது?

பகல் வேளையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புடன் தொடர்பு கொள்வதானால் ஆகக் குறைந்தது அரைமணி நேரமாவது விரல்தேயத் தேய நம்பரைச் சுழற்றிக் கொண்டிருகக வேணடும்.

'குருடன் பெண்டிலுக்கு அடித்த கதை' போல சில வேளை அந்தத் தொடர்பு கிடைத்துவிடும்.

இத்தனைக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு 'நேரடித் தொலைபேசிச்சேவை' என்று நாமகரணம் சூட்டப்பட்டுள்ளது.

அதுவும் போகட்டும்!

வட மகாணத்துக்குள்ளேயே தொடர்பு கொள்ள முடிகிறதா?

மன்னாருடனான தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டு ஒரு மாதத்துக்கும் மேலாகிவிட்டது.

அண்மையில் அங்கு நடைபெற்ற அனர்த்தங்களை எவரும் அறிந்துவிடக் கூடாது என்பதற்கான முன்னேற்பாடாகவும் இது இருககலாம்.

இப்போது அந்த மாவட்டத்தில் குடிமக்களே இல்லையென்கிறார்கள். எனினும், இதனை அறிந்துகொள்ள எந்த வழியுமிலலை.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்குக் கடந்த இரண்டு வாரமாக தொலைபேசிச் சேவையில்லை.

இங்கிருந்து நாற்பதுமைல் தொலைவிலுள்ள கிளிநொச்சியில் என்ன நடைபெறுகின்றது என்று கூட அறியமுடியாத 'இருட்டில்' வாழும் பரிதாப நிலை யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனையும் ஒரு புறத்தே விடுவோம்.

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள், இந்த மாவட்டத்துக்குள்ளேயே என்ன நடைபெறுகின்றது என்று அறியக்கூடிய நிலையில் இருக்கிறார்களா?

இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இருபத்திரணடுமைல் தூரத்திலுள்ள பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மட்டுமன்றி, ஆறுமைல் தொலைவிலுள்ள வேலணையுடன் கூட தொலைபேசியில் தொடர்பு கொள்ளமுடியாது.

சாவகச்சேரி, அச்சுவேலி, கோப்பாய், சுன்னாகம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை, காரைநகர், ஊர்காவற்றுறை என்று இந்தப் பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம்.

யாழ். நகருக்குள் வசிப்பவர்களே இன்னும் எத்தனை நாட்களுக்கு ஒருவரோடு ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியும் எனற சந்தேகமும் ஏற்படுகின்றது.

போக்குவரத்துப் பிரச்சினை மட்டுமன்றி, தொடர்புப்பிரச்சினையும் சேர்ந்து யாழ்ப்பாணத்தை தனிமைப் படுத்தி, சுருங்கச் செய்கின்றது.

யோகர்சுவாமிகள் கூறியது போல 'எல்லாம் நன்மைக்கே!'

### 300 பேர் கைது - கார்கள் - வீடு குண்டு வைத்துத் தகர்ப்பு

# இஸ்ரேலின் நிர்மூல நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்க லெபனானும் தயார்

(லண்டன்)

தென்லெபனானில் சியா சமூகத்தினர் மீது இஸ்ரேலியப்படைகள் மிகக்கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. ஷியா பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர் படைகள் பொதுமக்கள் மீது நடத்தியுள்ள மிகப்பெரும் தாக்குதல் இது என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கவசவாகனங்களில் வந்த இப்படைகள் மூந்நூறுக்கும் மேற்பட்டவர்களை விசாரணைக்கு கூட்டிச் சென்றுள்ளது. தப்பியோட முனைந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் இருவர் காயமுற்றனரென்றும் இஸ்ரேலிய வானொலி நேற்று அறிவித்தது.

இதேவேளை, இஸ்ரேலியப் படைகள் மூன்று கார்களையும் வீடொன்றையும் குண்டு வைத்துத் தகர்த்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

இதற்கிடையில் இஸ்ரேலியப் படைகள் தம் தாக்குதலை நிறுத்தாவிட்டால் தென் லெபனான் தக்க பதிலடி கொடுக்கத் தயங்காது என்று தென் லெபனான் அமைச்சர் ஒருவர் அறிவித்திருக்கிறார்.

இது இவ்வாறு இருக்க கெய்ரோவுக்கு விஜயம் செய்த இஸ்ரேலிய சிறப்புத் தூதுவர் (அமைச்சர் மொஷி சாஹல்) எகிப்திய அதிபர் முபாரக்கின் தனிப்பட்ட செய்தி ஒன்றுடன் நாடு திரும்பியுள்ளார். மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாகவே இவர் எகிப்திய விஜயம் மேற்கொண்டிருந்தார்.

மேற்படி தனிப்பட்ட செய்தி இஸ்ரேலியப் பிரதம மந்திரி சிமோன் பெரஸிடம் கையளிக்கப்பட்டது.

### எகிப்திய அதிபரின் யோசனை:

## ஏற்க முடியாதது என்கிறது பலஸ்தீன விடுதலை இயக்கம்

(லண்டன்)

அமெரிக்கத் தலையீட்டுடன் ஜோர்தான், இஸ்ரேல், பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு இடையிலான பேச்சுவார்த்தைகள் நேரடியாக நடைபெற வேண்டும் என்ற எகிப்திய அதிபர் முபாரக்கின் யோசனையை பலஸ்தீன விடுதலை இயக்கம் நிராகரித்துள்ளது.

சர்வதேச மாநாடு ஒன்றின் மூலமே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று மேற்படி விடுதலை இயக்கப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எகிப்திய அதிபர் நியுயோர்க் டைம்ஸ் இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்படி நேரடி சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு அமெரிக்கா உதவ வேணடும் என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஒன்பதரை லட்சம் செலவில் துறைமுகம்

(சென்னை)

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒன்பதரை இலட்சம் ரூபா செலவில் இரு மீன்பிடித் துறைமுகங்களை அமைக்கத் தமிழ் நாடு அரசு தீர்மானித்துள்ளது.

இத்தகவலை மீன்வளத்துறை அமைச்சர் திரு. கோவேந்தன் மதுரையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் வெளியிட்டார்.

ராமநாதபுரம் நகர் ஒரு கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### ராமேஸ்வரத்தில் மட்டுமல்லாது

## ஏனைய பகுதிக்கும் சென்று மீன்பிடிக்க மந்திரி யோசனை

(ராமேஸ்வரம்)

''ராமேஸ்வரம் கடற் பகுதியில் மட்டுமே மீன் பிடிக்கச் செல்லாமல் இருல் அதிகம் பிடிபடக்கூடிய மற்றும் பகுதிகளுக்கும் மீனவர்கள் செல்ல வேண்டும்'' என்று தமிழ்நாடு மீன் வளத்துறை அமைச்சர் திரு. கோவேந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் மண்டபம் முகாமுக்குச் சென்று இலங்கையில் இருந்து வந்த அகதிகளை முன்னதாகப் பார்வையிட்டார்.

''இலங்கைக் கடற்படையினரால் தாக்குதலுக்குள்ளாகி வரும் தமிழ்நாடு மீனவர்களுக்குப போதிய பாதுகாப்பு வழங்கப்படும்'' என்றும் தெரிவித்தார்.

### தொழிற் சங்க நடவடிக்கையும் தடை

## டாக்கா நகரில் ஊரடங்கு பொலிஸ் இராணுவ் காவல்

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நேற்று முனதினம் நள்ளிரவு முதல் காலவரையறையற்ற ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நகரின் முக்கிய நிலைகளில் ஆயுதம் தாங்கிய பொலிசாரும் இராணுவத்தினரும் காவல் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் அரும் திகதி பொதுத் தேர்தல் நடைபெருது என்று தேர்தல் கமிஷன் முறைப்படி அறிவித்துள்ளது. தேர்தலை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தாலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தாலும் ஜனாதிபதி எர்ஷாத்தேர்தல் ரத்துச் செய்யப்பட்டு இராணுவச் சட்டம் மீண்டும் அமுல் படுத்தப்படுவதாக வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தார்.

தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கு இங்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் இருபத்தோராம் திகதி கருத்துக் கணிப்பு நடைபெறும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

### 80 வயதில் இவர் படிக்க விரும்பிய 'பாடம்'

(கேப்டவுன்)

எண்பது வயது தாத்தா ஒருவருக்கு உண்டான இன்பக் கிளுகிளுப்பு அவரை புத்தகசாலை ஒன்றில் இருந்து பாலியல் புத்தகத்தை களவாடத் தூண்டியதாம்.

''காதல் செய்வது எப்படி?'' என்ற பாலியல் புத்தகத்தை சிட்னி வில்லியம் ஹேத் என்ற இந்நபர் எடுத்து தனது நீளக் காற்சட்டைக்குள் மறைக்க முற்பட்டவேளை பிடிபட்டாராம்.

இவருக்கு நீதிமன்றத்தில் ஒத்திவைக்கப்பட்ட தண்டனை விதிக்கப்பட்டது.

### 10 பேர் கொலை

(புதுடில்லி)

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் வன்செயல்களில் பத்துப் பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமுற்றுமுள்ளனர்.

### நிக்கராகுவா மீது சூல்ட்ஸ் பாய்ச்சல்:

## அண்டை பிராந்தியங்களில் பூசலை வளர்க்க முனைகிறது

(லண்டன்)

நிக்கராகுவா அயல் பிராந்தியங்களில் பூசல்களை உண்டு பண்ணக் கூடிய வகையில் செயற்படுகிறது என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஜோர்ஜ் சூல்ட்ஸ் வன்மையாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

நிக்கராகுவா விவகாரத்தில் சோவியத் யூனியன் அதற்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரதமரின் கோரிக்கை

(குஜராத்)

''தீவிரவாதிகளுடன் தமக்கு உள்ள தொடர்பை ஜனதாக் கட்சியும், பாரதீய ஜனதாக் கட்சியும் விளக்க வேண்டும் என்று பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி குஜராத்தில் பல பொதுக் கூட்டங்களில பேசுகையில் கூறினர்.

மத்தியிலும், மாநிலங்களிலும் ஒரே கொள்கையுடைய ஆட்சியிருப்பதே சிறப்பானது என்றார் அவர்.

## மாஜி லிபியத் தூதுவர் மீது வீயன்னாவில் துப்பாக்கிச்சூடு

(வீயன்னா)

முன்னாள் லிபியத் தூதுவராக ஆஸ்ட்ரியாவில் இருந்த அல்-கடாம்ஸி துப்பாக்கியால் சுடப்பட்டு அபாயகட்டத்தில் இருப்பதாக வீயன்னா அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

காரில் வந்த இனந்தெரியாதோரே இத்துப்பாக்கிச் சூட்டை நிகழ்த்தியதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

ஈழமுரசு

## அமெரிக்க தகவல் பணிப்பாளர் சார்ள்ஸ் விக் கொழும்பில்

(கொழும்பு)

அமெரிக்கத் தகவல் ஸ்தாபனத்தின் பணிப்பாளரான சார்ள்ஸ் விக் நேற்றுக் காலை கொழும்பு வந்து சேர்ந்தார் இறந்வில்ல என்ற இடத்தில் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' வானொலி ஒலிப்ரபுக்கென ஒலிபரப்பு நிலைய ஆரம்ப வைபவத்தில் கலந்து கொள்வதற்கென அவர் இங்கு வந்துள்ளார் இலங்கை அரசாங்கத்தின் விருந்தினர் என்ற முறையில் திரு. விக் ஜனாதிபதி ஜெயவர்த்தனவையும் முக்கிய அரசாங்கத் தலைவர்களையும் சந்திக்கவிருக்கிறார்.

### பலாலிக்கு அனுப்ப முயற்சி:

# யாழ். மக்கள் உறுதியளித்தால் மட்டும் தீயணைக்கும் இயந்திரம் வர அனுமதி

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கென இறக்குமதி செய்யப்பட்டு தற்போது கொழும்பில் வைக்கப்பட்டிருக்கும் தீயணைப்பு இயந்திரங்களையும், வாகனத்தையும் பலாலி விமான நிலையத்திற்கு வழங்க கொழும்பு மட்டத்தில் எடுக்கப்படும் முயற்சிகளை தடுத்து நிறுத்த யாழ்ப்பாண பொதுமக்களினதும், இயக்கங்கள், ஸ்தாபனங்களினதும் பரிபூரண உதவியையும் யாழ் மாநகர ஆணையாளர் திரு சிவஞானம் வேண்டியுள்ளார்.

நேற்றிரவு கொழும்பிலிருந்து யாழ். திரும்பிய ஆணையாளரை இதுபற்றி 'ஈழமுரசு' கேட்டபோது "இவ் இயந்திரங்களையும் வாகனத்தையும் எவரும் கொள்ளையடிக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்' என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தன்னிடம் நேரில் வினவியுள்ளதாகத் தெரிவித்தார்.

இதனை யாழ்ப்பாணம் கொண்டுவர பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை ஆணையாளர், அமைச்சர் அத்துலத் முதலியைச் சந்தித்துப் பேசினார். அப்போது அமைச்சரும் கூட தன்னிடம் இதே கேள்வியை எழுப்பினதாக அவர் தெரிவித்தார்.

தற்போது நடைபெறும் ஜீ. சி ஈ. சாதாரண பரீட்சை சகல இயக்கங்களினதும், பொதுமக்களினதும் ஆதரவைப்பெற்று அசம்பாவிதமின்றி ஒழுங்காக நடத்தப்படுவதைப் போன்று, தீயணைக்கும் இயந்திரங்கள், வாகனத்துக்கும் எதுவும் நடைபெறாது பார்த்துக் கொள்ள பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பைப் பெறமுடியுமென்று ஆணையாளர் அமைச்சருக்குத் தெரிவித்ததாகவும் தெரிய வந்துள்ளது.

பதினேழு லட்சம் ரூபா பெறுமதியான தீயணைக்கும் இயந்திரத்தை யாழ்நகர் சரியான முறையில் பயன்படுத்த வேண்டிய நிலை இன்று உருவாகியுள்ளது.

இதற்காக பொதுமக்கள் பிரதிநிதிகளின் கூட்டமொன்றை விரைவில் நடத்தி அவர்களின் ஆலோசனையைப் பெறவும் ஆணையாளர் எண்ணியுள்ளார்.

பொது மக்கள் வழங்கும் உறுதி மொழியிலேயே இயந்திரங்கள் இங்கு வருவது தங்கியிருப்பதாக மாநகராட்சி மன்ற பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### காலமானதால் இடைத்தேர்தல்

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. வை. சண்முகம் காலமானதனால் திருப்புத்தூர் சட்டப் பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இதில் காங்கிரஸ் வேட்பாளராக எஸ். ஜி. மணவாளனும் தி மு.க. வேட்பாளராக ஜி சண்முகமும் மற்றும் எட்டுப் பேருமாக மொத்தம் பத்து வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

### இனப்பிரச்சினை ..

—1ம் பக்கத் தொடர்

க் கூடாது. விரைவில் அமெரிக்காவுக்கு வருகைதரவிருக்கும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விஜயத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" எனவும் பேராசிரியர் சிங்கர் மேலும் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு இலங்கை விரைவில் அரசியல் தீர்வு காணுமானால் 1986-ல் அமெரிக்கா கூடிய உதவிகளை வழங்கலாமெனவும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

### இலங்கையர் மூவர்,,,

—1ம் பக்கத் தொடர்

இலங்கையிலிருந்து தமிழகம் நோக்கி வந்தவர்களின படகு கவிழ்ந்ததால் மரணமானவர்களின் சடலங்களாக இவை இருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

### தமிழக புதிய...

—1ஆம்- பக்கத் தொடர்

சரவை சகாக்கள் சட்ட மேலவைத்தலைவர் திரு. ம, பொ. சிவஞானம் முதலான பலரும் கலந்து கொண்டனர்.

இப்புதியவர்களுடன் திரு. இராமச்சந்திரன் தலைமையிலான அ. தி. மு: க. அமைச்சரவையின் எண்ணிக்கை இருபத்துநான்காகிறது.

புதிய அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்டு பொறுப்புகள் விவரம்:- திரு கே ராஜாராம் – தொழில்; திரு வி. பி. சுவாமிநாதன் - கைத்தறித் துறை; திரு. டி. வீராசாமி – வாணிக வரித்துறை; திரு நல்லுசாமி – வீட்டுவசதித்துறை; திரு. ஆர். எம் ஜெகதீசன் - ஊரகத்தொழில்; திரு. டி. இராமசாமி – மறு உதவி வேலை வாய்ப்புத்துறை; திரு. ஏ அருணாசலம் - ஆதிதிராவிட நலத் துறை;

### பட்டுநகர் முகாம்,,,

—1ஆம்- பக்கத் தொடர்

தாக்குதலில் தீவிரவாதிகள் தரப்பில் மூன்று பேர் கொல்லப்பட்டதாகவும், பொலிசார் எவரும் காயமடையவில்லையெனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பொலிசாரின் தாக்குதலால், கொல்லப்பட்ட மூன்று இளைஞர்களது சடலங்களையும் விட்டுவிட்டு ஏனைய இளைஞர்கள் தப்பி ஓடிவிட்டதாகவும். கொலையுண்டோரின் கைகளில் ஒரு இயந்திரத்துப்பாக்கியும், கைத்துப்பாக்கி ஒன்றும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முகாமே தாக்குதலுக்குள்ளானதாம்.

### ஜெனரேட்டர்...

—1-ஆம் பக்கத் தொடர்

வில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது இவற்றின் பெறுமதி சுமார் ஒரு லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இலங்கை வங்கிக் கிளை அண்மையில் கிளிநொச்சிக் கிளையுடன் இணைக்கப்பட்டது.

## இந்தியாவுக்கு முதல் வெற்றி

உலகக் கோப்பைக்கான 7 நாடுகள் கலந்துகொள்ளும் கிரிக்கட் பந்தயத்தில் இந்திய அணி அரை இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. நேற்று அவுஸ்திரேலிய அணியை 8 விக்கட்டுக்களால் வெற்றிபெற்றதோடு இத் தகுதியை இந்தியா பெற்றது. இந்திய அணியின் விளையாட்டில் தமிழ் நாட்டைச் சேர்ந்த கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்தின் அவுட்டாகாத 93 ரன்கள் குறிப்பிடத்தக்கன

### தினசரி ஒரு..

— 1ம் பக்கத் தொடர்

மும் மூன்றுதடவைகள் நடாத்தப்பட்டு வந்தன. இதனால் நெடுந்தீவு வாசிகள் பெரிதும் அவதியுற்று வருகின்றனர்.

தினமும் காலை 7 மணிக்கு நெடுந்தீவிலிருந்து புறப்பட்டுக் குறிகட்டுவானைச் சென்றடையும் இப்படகுச் சேவை மீண்டும் குறிகாட்டுவானிலிருந்து பிற்பகல் 2 30 மணிக்கு நெடுந்தீவு நோக்கிப் புறப் படும். இப்படகுப் போக்குவரத்துச் சேவை நயினாதீவு ஊடாகச் சென்று அங்கு கடற்படைச் சோதனைகளை முடித்துக் கொண்டே பிரயாணத்தைத் தொடரவேண்டியுள்ளது.

### பார்த்தசாரதி - -

1-ம் பக்கத் தொடர்

இலங்கை இந்திய, பேச்சுவார்த்தைகளில் அவர் அங்கம் வகிப்பதை இலங்கை அரசு விரும்பவில்லை என்று காரணம் கூறப்படுகிறது. ஆனால், பாரத வெளியுறவுக் கொள்கைக் குழுவின் தலைவராக திரு பார்த்தசாரதி பதவி வகிப்பதால், அவரைத் தவிர்த்து வைத்து பாரதம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் சாத்தியமில்லை என்றும் தெரியவந்துள்ளது.

### தமிழர்கள் இரகசிய...

— 1-ம் பக்கத்தொடர்

வேண்டும். இது பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு எமக்கு உதவியாக இருக்கும்" என்றும் அமைச்சர் சொன்னார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் மீது அவர்கள் மேற்கொண்ட தாக்குதலை பொலிஸாரும் இராணுவத்தினரும் வெற்றிகரமான முறையில் முறியடித்துவிட்டதனால் தான் சென்னையில் தங்கள் சாதனை பற்றி மிகைப்படுத்திப் பேசுகின்றனர். தீவிரவாதிகள் இந்த பொலிஸ் நிலையத்தைத் தாக்கியபோது நாற்பதிற்கும் குறைந்த பாதுகாப்புப்படையினரே இருந்தார்கள். என்றாலும் பாதுகாப்புப் படையினர் கொடுத்த பதிலடியின்போது இந்த எண்ணிக்கையிலும் பார்க்கக் கூடுதலான தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இராணுவ, பொலிஸ் தரப்பில் நான்கு பேர் மட்டுமே காயமடைந்தனர் எனவும் அமைச்சர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

தீவிரவாதிகள் இந்த தாக்குதல் சம்பவம் குறித்து உண்மைக்கு மாறான பொய்ப் பிரசாரங்களை வெளி நாடுகளில் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்த அமைச்சர் 1983-ம் ஆண்டு ஜூலை வன்செயல்களுக்குப் பின்னர் சிங்கள மக்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் முதல் தடவையாக வெற்றியீட்டியுள்ளனர். சிங்களவர் மத்தியில் வாழ்வதே யாழ்ப்பாணத்தைவிட மிகப் பாதுகாப்பாக இருக்கும் என்பதும் தமிழ் மக்கள் இரகசியமான முறையில் தேசியபாதுகாப்பு நிதிக்கு உதவி செய்வதுமே இந்த இரண்டு பெரும் வெற்றிகள். அமெரிக்கப் பிரதி உதவி வெளிவிகார அமைச்சரின் கருத்து இக் கூற்றுக்குச் சான்று பகருகிறது எனவும் குறிப்பிட்டார்.


**EURO LANKA TRAVELS AND TOURS LTD.**

✱ யாழ்ப்பாண மக்களின் வசதியை முன்னிட்டு கொழும்பில் தலைமை அலுவலகத்தைக் கொண்டிருக்கும் எமது ஸ்தாபனம் இப்பொழுது யாழ் நகரிலும் கிளையை ஆரம்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உலகின் எல்லாப் பாகங்களுக்கும் பேர்லின் (Berlin) உட்பட மிகக் குறைந்த விலையில் விமான டிக்கட்டுகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு திங்கட்கிழமைக்கும் ஆசனப் பதிவு செய்து கொடுக்கப்படும்.

தற்போது போலினுக்கு (BERLIN) மொஸ்கோ (MOSCOW) மூலம் விசேஷ AEROFLOT சேவையில் 18.3 85 ந் திகதி ஒரு குழுவினர் பிரயாணம் செய்வதற்கு டிக்கட்டுகள் எமது காரியாலயத்தில் பதிவு செய்யப்படும். மட்டுப்படுத்தப்பட்ட அளவு ஆசனங்களே இருப்பதால் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

எமது சேவையின் விபரங்கள்;

(1) உங்கள் பயணம் முடியும் வரைக்கும் எமது பிரதிநிதிகளின் 24 மணிநேர ஒத்துழைப்பு
(2) பிரயாணக் காசோலைகள் (Travellers Cheques) எடுத்துக் கொடுப்பதற்கான இலவச சேவை.
(3) விமான ஆசனப் பதிவுகள் (Confirmation) மற்றும் சகல பிரயாண தேவைகளும் செய்து கொடுக்கப்படும்.
(4) கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலயம் செல்வதற்கான போக்குவரத்துச் சேவை.

**EURO LANKA TRAVELS AND TOURS LTD.**

40, THIRD CROSS STREET, JAFFNA.

தலைமை அலுவலகம்:

**EURO LANKA TRAVELS AND TOURS LTD.**

6A, DAISY VILLA AVENUE, COLOMBO - 4.

Telephone: 585990, 589992


## முதலாண்டு நினைவஞ்சலி

### அமரர் அப்பாக்குட்டி இராசையா

(இளைப்பாறிய கணக்காளர், இ. போ. சபை)

தோற்றம்: 13. 06. 1908

மறைவு: 14. 02. 1984

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் அறிவின் சுடராய் வழிகாட்டிய எமது அன்புத் தந்தையே நீங்கள் இறைவன் திருவடியை அடைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுச்சுடர் அணையாத தீபமாய் எங்கள் நெஞ்சங்களில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"மகேஸ் வாசா"
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

மகள்மார், மருமகன்மார்,
பேரப் பிள்ளைகள்,
மைத்துனர், மைத்துனிமார்,

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 4-3-84 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336.